**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி : 24.04.2026 – வெள்ளிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

தமிழகம் மற்றும் மேற்கு வங்க மாநிலத்தில் முதல்கட்டமாகவும் நேற்று நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில் அதிக சதவிகித வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மேற்கு வங்கத்தில் 2ஆம் கட்ட சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம் இன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு குடியரசு துணைத் தலைவர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் மலேரியா தொற்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை தெரிவித்துள்து.

*மின்னணு இயந்திரம் (14)*

தமிழகம் மற்றும் மேற்கு வங்க மாநிலத்தில் முதல்கட்டமாகவும் நேற்று நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில் அதிக சதவிகித வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் 85

சதவிகித வாக்குகளும், மேற்கு வங்கத்தில் மிக அதிக அளவிலான 92 சதவிகித வாக்குகளும் பதிவாகின.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், மாநிலம் முழுவதுமுள்ள 62 வாக்கு எண்ணும் மையங்களில் பல அடுக்கு பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன. 24 மணி நேரமும் துப்பாக்கி ஏந்திய காவலர்கள் வாக்குப்பதிவு இயந்திரங்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். புதுச்சேரி யூனியன் பிரதேசம், கேரளம், அஸ்ஸாம், தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கத்தில் நடைபெற்ற மற்றும் இம்மாதம் 29ஆம் தேதி நடைபெறவுள்ள மேற்குவங்கத்தின் 2ஆம் கட்ட தேர்தலில் பதிவான வாக்குகள் மே மாதம் 4ஆம் தேதி எண்ணப்படவுள்ளன.

*மேற்கு வங்கம் தேர்தல் (12)*

மேற்கு வங்கத்தில் வரும் 29ஆம் தேதி 142 தொகுதிகளுக்கு நடைபெறவுள்ள 2ஆம் கட்ட சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது. டம் டம் பகுதியில் பொதுக்கூட்டம் ஒன்றில் பாஜக மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, இன்று தேர்தல் பரப்புரை மேற்கொண்டார். அப்போது மகளிரின் பாதுகாப்பே தமது கட்சியின் உயர் முன்னுரிமை என்று கூறினார். தொடர்ந்து, அவர் தமது உரையில், மேற்கு வங்கத்தின் முதல்கட்ட தேர்தலிலும், தமிழகத்திலும் பெருவாரியான மக்கள் வாக்களித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

மேற்கு வங்க மாநிலத்தில் நடைபெற்ற முதல் கட்ட வாக்குப்பதிவில் மக்கள் மாற்றத்தை விரும்புவதையே காட்டுவதாக பாஜக மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் செல்வி மம்தா பானர்ஜி உள்ளிட்டோர் மேற்கு வங்க மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இன்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

*பஞ்சாத்து ராஜ் -1 (04)*

தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. உள்ளாட்சி அமைப்புகளின் கட்டமைப்பு மற்றும் அடித்தட்டு ஜனநாயகத்தை வலுப்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் இத்தினம் கொண்டாடப்படுகிறது. இது குறித்த கூடுதல் தகவல்கள்...

**(வாய்ஸ்)**

*பஞ்சாத்து ராஜ் -2 வாய்ஸ் (17)*

**(வாய்ஸ்)**

1992ஆம் ஆண்டு 73ஆவது அரசியல் சாசன சட்ட திருத்தத்தின் கீழ் தேசிய பஞ்சாயத்து தினத்திற்கான சட்டம் இயற்றப்பட்டு 1993ஆம் ஆண்டு முதல் பஞ்சாயத்து ராஜ் தினம் நடைமுறைக்கு வந்தது. உள்ளாட்சி நிர்வாகத்தையும் அதன் அமைப்பையும் வலுப்படுத்தும் வகையில் மின்னணு கிராம ஸ்வராஜ், எனது பஞ்சாயத்து, ஸ்வா மித்வா உள்ளிட்ட பல்வேறு மின்னணு செயல்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. 95 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட கிராமங்களில் 3-G, 4-G, இணைப்புகளுடன் உள்ளாட்சி அமைப்புகள் செயல்படுகின்றன. கடைக்கோடி மக்களுக்கும் அரசின் நலத்திட்டங்கள் சென்றடைவது இதன் மூலம் உறுதி

செய்யப்பட்டுள்ளது. பஞ்சாயத்து ராஜ் தினத்தையொட்டி குடியரசு துணைத் தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு.நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித் ஷா உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

வளர்ச்சியடைந்த சுயசார்பு இந்தியாவை கட்டமைப்பதில் பஞ்சாயத்து அமைப்புகளின் பங்கு இன்றியமையாதது என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார். பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், பொது மற்றும் தேசிய சேவையில் பஞ்சாயத்து

*பஞ்சாத்து ராஜ் வாய்ஸ் -3 (05)*

உறுப்பினர்களின் அர்ப்பணிப்பு அனைவருக்கும் உத்வேகம் அளிப்பதாக தெரிவித்துள்ளார். பஞ்சாயத்து ராஜ் முறை என்பது இந்தியாவின் மிகப் பழமையான ஜனநாயக மரபுகளுள் ஒன்றாகவும், ஜனநாயகத்தின் வலிமையான தூணாகவும் திகழ்வதாக திரு. அமித் ஷா சமூக ஊடகப் பதிவு ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

*சுஜாதா ஷர்மா (18)*

மேற்காசிய நெருக்கடியால் பல்வேறு இடையூறுகள் இருந்தபோதிலும், நாடு முழுவதும் உள் நாட்டு எல்பிஜி விநியோகம் நிலையானதாக உள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுடெல்லியில் அமைச்சகங்களுக்கு இடையிலான சந்திப்பில் பேசிய மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் செயலாளர் திருமதி. சுஜாதா ஷர்மா, எல்பிஜி விநியோகம் தொடர்ந்து இயல்பாக உள்ளது என்றும், நாடு முழுவதும் உள்ள விநியோகஸ்தர்கள் எந்த தட்டுப்பாடும் தெரிவிக்கவில்லை என்றும் கூறினார். மேலும் பொதுமக்கள் ஆன்லைன் முன்பதிவை தேர்வு செய்யுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

வளைகுடா பிராந்தியத்திலுள்ள இந்திய மாலுமிகளின் பாதுகாப்புக்கு அரசு அதிக முன்னுரிமை அளித்து வருவதாக வெளியுறவு அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் திரு. அஸெம் ஆர் மஹாஜன் கூறியுள்ளார். பிப்ரவரி 8ஆம் தேதி முதல் சுமார் 12.38 லட்சம் பயணிகள் இப்பகுதியில் இருந்து இந்தியாவிற்கு பயணம் செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மேற்காசிய நெருக்கடி தொடர்பான அனைத்து முன்னேற்றங்களையும் அமைச்சகம் உன்னிப்பாக கண்காணித்து வருவதாக வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பான திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்,

*உலக கால்நடை மருத்துவ தினம் -(12)*

ஏப்ரல் 25ஆம் தேதி உலக கால்நடை மருத்துவ தினத்தை முன்னிட்டு, இந்திய விலங்குகள் நல வாரியம் மற்றும் புதுச்சேரி பிராணிகள் நலன் மற்றும் பாதுகாப்பு இயக்கம் இணைந்து கால்நடைகள் மற்றும் செல்லப் பிராணிகளுக்கான சிறப்பு சிகிச்சை முகாமை நடத்துகின்றன. இந்த முகாம் நாளை காலை 10 மணிக்கு, வில்லியனூரை அடுத்த கூடப்பாக்கம் கிராமத்தில் உள்ள மந்தவெளி திடலில் நடைபெற உள்ளது. இந்த சிறப்பு முகாமில் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், தடுப்பூசிகள், மலட்டுத்தன்மை கண்டறிதல், சினை பரிசோதனை, சினை ஊசி போடுதல், வெறிநோய் தடுப்பு ஊசி மற்றும் மஞ்சள் காமாலை தடுப்பூசி ஆகியவை வழங்கப்பட உள்ளன. எனவே, பொதுமக்கள் மற்றும் கால்நடை வளர்ப்போர் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

*உலக மலேரியா தினம் - 1(06)*

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 25 ஆம் தேதி உலக மலேரியா தினம் அனுசரிக்கப்படுகிறது. **மலேரியாவை ஒழித்திட-இப்போது நம்மால் முடியும், நாம் செய்தே ஆக வேண்டும்** என்ற இந்த ஆண்டிற்கான கருப்பொருளை அடிப்படையாக கொண்டு உலக நாடுகள் மலேரியா

ஒழிப்பு நடவடிக்கையை முழு வீச்சில் திறம்பட செயல்படுத்தி வருகின்றன. இது குறித்த கூடுதல் தகவல்கள்...

(வாய்ஸ்)

*உலக மலேரியா தினம் வாய்ஸ் - 2(16)*

(வாய்ஸ்)

இன்றைய சூழலில் மலேரியா நோய், உலக நாடுகளிடையே பெரும் அச்சுறுத்தாகவும், சவாலாகவும் உள்ளது. நம் நாட்டில் வடக்கு, வடகிழக்கு மற்றும் அதனைச் சார்ந்த மலைப் பிரதேசங்களில் மலேரியா நோய் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. மலேரியா என்பது பிளாஸ்மோடியெம் என்னும் ஒட்டுண்ணியால் பரவும் நோய் ஆகும். இந்நோயினை பரப்பும் Anopheles வகை பெண் கொசுக்கள் நன்னீரிலேயே உற்பத்தியாகின்றன. பிளாஸ்மோனியம் ஒட்டுண்ணி இருக்கும் இந்த வகை கொசுக்கள் மனிதனைக் கடிக்கும் போது மட்டுமே மலேரியா நோய் ஏற்படுகிறது. இவ்வகை கொசுக்கள் உற்பத்தியாகாமல் தடுக்க, அனைத்து வகை நீர்த்தேக்கத் தொட்டிகள், கிணறுகள் உள்ளிட்டவற்றை, கொசு புகா வண்ணம் வலைகளால் மூடி பாதுகாக்க வேண்டும். உலக சுகாதார அமைப்பின் தகவலின்படி 2022ஆம் ஆண்டு உலக அளவில் 249 மில்லியன் மலேரியா தொற்றும், இந்தியாவில் 1 லட்சத்து 76 ஆயிரத்து 522 மலேரியாக தொற்றுகளும் கண்டறியப்பட்டது. மலேரியா ஒழிப்பு நடவடிக்கையை துரிதப்படுத்துவதே உலக மலேரியா தினம் அனுசரிக்கப்படுவதன் நோக்கமாகும்.

*உலக மலேரியா தினம் வாய்ஸ் – 3 (04)*

2021ஆம் ஆண்டு முதல் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் சுகாதாரத் துறை தொடர்ந்து மேற்கொண்ட நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் காரணமாக, உள்ளூர் தொற்றினால் மலேரியா நோய்

ஏற்படாத நிலையை தற்போது புதுச்சேரி அடைந்துள்ளது என்று புதுச்சேரி அரசின் சுகாதாரம் மற்றும் நலவழித்துறை தெரிவித்துள்ளது.

*புதுச்சேரி விமானம் (09)*

புதுச்சேரி விமான நிலையத்தில் இருந்து பெங்களூர் செல்லும் இண்டிகோ ஏர்லைன்ஸ் நிறுவனம் தங்களது விமான சேவையை விரிவுபடுத்தியுள்ளது. இந்த கூடுதல் விமான சேவை மே 1-ம் தேதி முதல் தொடங்க உள்ளது. இதன்படி பெங்களூரில் இருந்து காலை 10.10 மணிக்கு புறப்படும் விமானம் 11.15 மணிக்கு புதுச்சேரியை வந்தடையும் என்றும், புதுச்சேரியில் இருந்து 11.35 மணிக்கு புறப்படும் விமானம் பெங்களூருக்கு 12.15 மணிக்கு சென்றடையும். அதே போல் ராஜமுந்திரியில் - ஹைதராபாத் - புதுச்சேரி நகரங்களுக்கு இடையேயான விமான சேவையும் விரிவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

*காரைக்கால் குறைதீர்ப்பு (11)*

புதுச்சேரி காவல் துறையின் சார்பில் பொதுமக்களின் குறைகளை நேரடியாகக் கேட்டறிந்து தீர்வு காண்பதற்கான 'மக்கள் மன்றம்' நிகழ்ச்சி காரைக்கால் மாவட்டத்தில் நாளை காலை 11 மணி முதல் மதியம் 1 மணி வரை இரண்டு இடங்களில் நடத்தப்பட உள்ளது. காரைக்கால் நகர காவல் நிலையத்தில் நடைபெறும் முகாமில் முதுநிலை காவல் கண்காணிப்பாளரும், நெடுங்காடு காவல் நிலையத்தில் நடைபெறும் முகாமில் வடக்கு மண்டல காவல் கண்காணிப்பாளரும் பங்கேற்று பொதுமக்களிடம் இருந்து மனுக்களைப் பெற உள்ளனர். பொதுமக்கள் தங்களின் பாதுகாப்பு தொடர்பான புகார்கள் மற்றும் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாத பிரச்சினைகளை இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

*மாஹே மோடி பாராட்டு (11)*

இந்தியாவில் அரசு ஊழியர்களின் பயிற்சியை நவீனப்படுத்துவதற்காக தொடங்கப்பட்ட மிஷன் கர்மயோகி பாரத் முன்முயற்சியின் கீழ் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயிற்சி வகுப்புகளை வெற்றிகரமாக முடித்ததற்காக மாஹே நகராட்சியின் மேலாளர் எம்.பிரவீன் குமாருக்கு பிரதமர் திரு. நரேந்திரமோடியிடமிருந்து பாராட்டு கடிதம் கிடைத்துள்ளது. கர்மயோகி பாரத் திட்டத்தின் விரிவான பயிற்சித் திட்டங்களில் பங்கேற்ற திரு. பிரவீன் குமார், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட படிப்புகளை முடித்த ஒரே அதிகாரி ஆவார். இந்த சாதனையை அங்கீகரிக்கும் வகையில், ஏப்ரல் முதல் வாரத்தில் நடைபெற்ற சாதனா சப்தாவின் போது அவருக்கு தக்ஷா பேட்ஜ் மற்றும் கர்மயோகி உத்கர்ஷ் பேட்ஜ் வழங்கப்பட்டது.

*காரைக்கால் ஜிப்மர் (10)*

புதுச்சேரி ஜிப்மர் மருத்துவர்க் குழு, நாளை காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில், காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை, நாளமில்லா சுரப்பிகளில் ஏற்படும் பிரச்சனைகள், சர்க்கரை நோய் மற்றும் தைராய்டு தொடர்பான நோய்களுக்கு சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை வழங்க உள்ளது. பொதுமக்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு காரைக்கால் ஜிப்மர் நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

*கிரிக்கெட் (03)*

ஐபிஎல் டி-20 கிரிக்கெட் போட்டித் தொடரில் பெங்களூருவில் இன்றிரவு 7.30 மணிக்குத் தொடங்கும் ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு மற்றும் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் களம் காணுகின்றன.

*ஒடிசா வானிலை வெப்பம் (10)*

ஒடிசா மாநிலம் கடுமையான வெப்ப அலையின் பிடியில் சிக்கித் தவித்து வருகிறது; பல மாவட்டங்களில் வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸைக் கடந்துள்ளது. கடும் வெப்பத்துடன் அதிக ஈரப்பதமும் நிலவுவதைச் சுட்டிக்காட்டி, இந்திய வானிலை ஆய்வு மையம் (IMD) பல மாவட்டங்களுக்கு 'மஞ்சள் எச்சரிக்கை' விடுத்துள்ளது. வெப்பம் உச்சத்தில் இருக்கும் நேரங்களில் மக்கள் வீட்டிற்குள்ளேயே இருக்குமாறும், போதுமான அளவு நீர் அருந்தி உடலை நீரேற்றத்துடன் வைத்துக்கொள்ளுமாறும், திறந்தவெளியில் கடினமான உடல் உழைப்பு சார்ந்த பணிகளைத் தவிர்க்குமாறும் சுகாதாரத் துறை அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

*ஆம் ஆத்மி (06)*

ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த திரு. ராகவ் சத்தா, திரு. சந்தீப் பதக் மற்றும் திரு. அசோக் மிட்டல் ஆகிய மாநிலங்களவை உறுப்பினர்கள் அக்கட்சியை விட்டு வெளியேறுவதாக அறிவித்துள்ளனர். இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடையே பேசிய திரு. ராகவ் சத்தா, வேறு சில மாநிலங்களவை உறுப்பினர்களுடன் பாஜக-வில் இணைய முடிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

தமிழகம் மற்றும் மேற்கு வங்க மாநிலத்தில் முதல்கட்டமாகவும் நேற்று நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில் அதிக சதவிகித வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மேற்கு வங்கத்தில் 2ஆம் கட்ட சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம் இன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு குடியரசு துணைத் தலைவர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் மலேரியா தொற்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது SS/MS/VM